செவலூர்

அருள்மிகு மதுக்கார நாச்சியம்மன்

திருக்கோயில்

மகா கும்பாபிஷேக மலர்



ப்ரமோதூத ஞூ ஆவணி மீ 17 உ

2-9-1990

செவலூர்

அருள்மிகு மதுக்காரநாச்சியம்மன் திருக்கோயில்



மகா கும்பாபிஷேக மலர்

பிரமோதூத ௵ ஆவணி ௴ 17 ௳

2—9—1990

உ
சிவமயம்

முகவுரை

புதுக்கோட்டை மாவட்டம் குழிபிறை சமீபம் அமைந்துள்ள செவலூர் அருள்மிகு மதுக்கார நாச்சியம்மன் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா பிரமோதூத ஆண்டு ஆவணித் திங்கள் 17ஆம் நாள் (2—9—90) சிறப்பாக நடைபெற்றது. பெருவிழா நினைவாக, பயனுள்ள விபரங்களை தன்னகத்தே கொண்ட இந்தச் சிறப்பு மலரை வெளியிடுவதில் மகிழ்ச்சி யடைகிறோம்.

எல்லாம்வல்ல இறைவி மதுவநாயகி அம்மை அவள் அருளாலே அவள்தாள் வணங்கி இந்தச் சிறப்பு மலரை அன்புடன் சமர்ப்பிக்கிறோம்.

இவண்

விழாக் குழுவினர்

* * *

பாரதியார் பாடல்

நகரத்தார் ஊக்கம் மிக்கார்

உத்தமராம் தனவணிகர் குலத்துதித்த
இளைஞர்பலர் ஊக்கம் மிக்கார்

உண்மையேதாரகம் என்று உணர்ந்திட்டார்
அன்பு ஒன்றே உறுதி என்பார்

வண்மையே குலதர்மமெனக் கொண்டார்
தொண்டொன்றே வழியாகக் கண்டார்

ஒண்மையுயர் கடவுளிடத் தன்புடையார்
குலமுயற நகருயர; நாடுயர உழைக்கின்றார்.

—மகாகவி பாரதியார்

செவலூர் அருள்மிகு மதுக்கார நாச்சியம்மன் திருக்கோயில்

நிர்வாகக்குழு உறுப்பினர்கள்

1	காரைக்குடி	—	திரு. மெ. கும. அழகப்ப செட்டியார்
		—	திரு. மெ. ராம. சொ. வீரப்ப செட்டியார்
2	குருவிக் கொண்டான்பட்டி	—	திரு. சொ. அ. சொக்கலிங்கம் செட்டியார்
		—	திரு. பழ. ப. பழனியப்ப செட்டியார்
3	ராங்கியம்	—	திரு. பழ. ஆ ஆண்டியப்ப செட்டியார்
		—	திரு. சொ. சுப்ரமணியன் செட்டியார்
4	மிதிலைப்பட்டி	—	திரு. அண. முத்தையா செட்டியார்
		—	திரு. மு. சித. சம்பந்தம் செட்டியார்
5	செவ்லூர்	—	திரு. மது. சி. சிவலிங்கம் செட்டியார்
		—	திரு. மது. வெ. ந. சொக்கலிங்கம் செட்டியார்
6	குழிபிறை	—	திரு. நா. கரு. ராமசாமி செட்டியார்
		—	திரு. ராம. நா. சேக்கப்ப செட்டியார்
7	பூலாங்குறிச்சி	—	திரு. பழ. வி. சொக்கலிங்கம் செட்டியார்
		—	திரு. வி. சொ. கா. மாணிக்கம் செட்டியார்
8	வலையபட்டி	—	திரு. பழ. உ. பழ. ராமலிங்கம் செட்டியார்
		—	திரு. சோம. சேதுச் செட்டியார்
9	கொத்தமங்கலம்	—	திரு. மு. சுப. அருணாசலம் செட்டியார்
		—	திரு. மு. சுப. குமரப்ப செட்டியார்
10	அரிமளம்	—	
11	கொப்பனாபட்டி	—	

உ

Phone : 2315

ஸ்ரீ சந்த்ர மௌளிஸ்வராய நம:

ஸ்ரீ சங்கர பகவத்பாதாசார்ய பரம்பராகத

பூஜ்யஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி

ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

ஸ்ரீமடம் : : ஸமஸ்தானம்

காஞ்சிபுரம் - 631 502

முகாம் :

தேதி : 25-9-90

அவ்வக்கிராமப் பாதுகாப்பிற்கு உரிய தேவதைகளாக விளங்கி அருள் பாலிப்பவள் அன்னை பராசக்தி.

புதுக்கோட்டை அருகிலமைந்துள்ள சேவலூரில் ஸ்ரீ மதுக்காரநாச்சி என்ற பெயருடன் அருள்பாலிக்கும் இவ்வன்னைக்கு அஷ்டபந்தன ஜீர ணோத்தாரன கும்பாபிஷேகம் முடிந்து மண்டலாபிஷேகம் நடத்திவருவதை யும் இந்நிகழ்ச்சி முடிவில் சிறப்பு மலரொன்று வெளியிடவிருப்பதையும் அறிந்து மகிழ்கிறோம்.

மண்டாலாபிஷேகம் இனிதே நிறைவேறவும் மலர் அன்னையின் அருட்டிறங்களை விளக்கி ஆஸ்திகம் பரப்பிடுவதாக அமையவும் ஸ்ரீமதுக்கார நாச்சியம்மையின் அருட்கிட்ட ஆசிர்வதிக்கிறோம்.

நாராயணஸ்ம்ருதி

உ

சிவமயம்

திருப்பெருந்திரு.

காசி விசுவநாத ஞானதேசிகர் அவர்கள்

கோவிலூர் மடாலயம்

அழகுக்கு அழகென ஆலயம் அமைத்து
அன்னை உன்சந்நதி அலங்காரம் நிறைந்து

அன்பர்களை ஆட்கொள்ளும் அருளும் கூடிய
மதுக்கார நாச்சியம்மன் திருவடி சரணம்

கொடையுளங் கொண்டெங் களைக் காப்பவளே
குடியாய் அகத்தில் குடி கொண்டவளே

தொழுபவர் துயரம் தீர்ப்பவளே
செவலூர் மதுக்கார நாச்சியளே.

நினைப்பவர் நெஞ்சில் நின்றவளே
நீங்காதெம்முள் இருந்தவளே.

நீ நானென்று சொன்னவளே
கடைக்கண் விழியருள் நாச்சியளே.

ஆதியும் அந்தமும் கடந்தவளே
அற்புதம் விளைவிக்கும் அம்பிகையே

ஆண்டு கொண்டெம்மை ஆள்பவளே
அம்மா துக்கார நாச்சியளே.

எம்மை ஆட்கொண்ட கொற்றவாளீஸ்வரர் தேவி திருநெல்லையம்மன் திருவருளால் சகல மக்களும் உடல் நலனும், மன நலனும், பொருள் நலனும் பெற்று வாழ்வாங்கு வாழ்ந்துவர வாழ்த்துகின்றோம்.

இப்படிக்கு,

காசி விசுவநாத ஞானதேசிகர்

உ

சிவ சிவ

தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணி செய்து கிடப்பதே.

தவத்திரு
குன்றக்குடி அடிகளார்

குன்றக்குடி - 623 206
பசும்பொன் தேவர்திருமகன் மாவட்டம்
தொலைபேசி : குன்றக்குடி, 27

நாள் : 30—8—90

அன்பிற்சிறந்த தங்களுக்கு எல்லா நன்மைகளும் பெருக திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

அருள்மிகு மதுக்காரநாச்சியம்மன் திருக்கோயில் திருக்குட நீராட்டு விழா அழைப்பிதழ் கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி. இத்திருப்பணியில் ஆர்வத்துடன் ஈடுபட்ட அன்பர்கள் அனைவருக்கும் உளம் நிறைந்த பாராட்டுக்கள்.

திருக்குட நீராட்டு விழா இனிதே நிறைவெய்தத் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

இன்ப அன்பு.
(குன்றக்குடி அடிகளார்)

பெறுநர்
அருள்மிகு மதுக்கார நாச்சியம்மன் திருக்கோயில்
செவலூர்
திருமயம் வழி.

நிகழ்ச்சி நிரல்

பிரேமோதூத ஞு ஆவணி மீ 14வ. 30—8—90 வியாழன்	மாலை 5-48 மணிக்கு மேல் 6 மணிக்குள் அனுக்ஞை. விக்னேஸ்வர பூஜை ஆரம்பம். 7-15 மணி முதல் வாஸ்து சாந்தி, மிருத் சங்கரணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம்
15வ. 31—8—90 வெள்ளி	காலை மணி 8க்கு மேல் 9க்குள் கடஸ்தாபனம். மாலை மணி 6 முதல் 9 வரை முதற்கால யாக பூஜை.
16வ. 1—9—90 சனி	காலை மணி 8-30 முதல் 11-30 வரை இரண்டாம்கால யாகபூஜை. மாலை மணி 6 முதல் 9 வரை மூன்றும்கால யாக பூஜை.
17வ. 2—9—90 ஞாயிறு	1 காலை மணி 4-30 முதல் நான்காம்கால யாக பூஜை. 2 காலை மணி 6க்கு மேல் 7 மணிக்குள் மகாகும்பாபிஷேகம். 3 காலை மணி 10-30 அளவில் மஹாபிசேகம். 4 இரவு 9 மணிக்கு அம்மன் புறப்பாடு.

சிறப்பு நிகழ்ச்சிகள்

31—8—90 மாலை முதல் 2—9—90 வரை
பிள்ளையார்பட்டி திரு. வைசு. ஆறுமுக தேசிகர்
காரைக்குடி திரு. நாராயண ஒதுவார்
திருமுறைப் பாராயணம்
தஞ்சை மாவட்டம் பின்னையூர்
நாதஸ்வர இசைத்தென்றல்
திரு. PM. ஹரிஹரன் குழுவினர்
நாதஸ்வர இன்னிசை.
2—9—90 காலை 9 மணி அளவில்
'சக்தியின் மகிமை' என்னும் தலைப்பில்
தமிழ்க் கொண்டல், இலக்கியத் தேனீ
'செஞ்சொல் நாயகன்' நன்னிலம்
திரு. இரா. கோகுல் அவர்கள்
இலக்கியப் பேருரை

செவலூர் அருள்மிகு மதுக்கார நாச்சியம்மன்

திருக்கோயில் திருப்பணி உபயதாரர்கள்

	திருப்பணி	உபயதாரர்கள்
1	நுழைவுவாயில், அம்பாள் விக்ரகம், சுதைவேலை, பெயிண்டிங்,	திரு. வி. பழ. வி. குமாரர்கள் பூலாங்குறிச்சி
2	முன் அலங்கார மண்டபம்	மிதிலைப்பட்டி இரணிக் கோயில் நகரத்தார்கள்
3	ஆலயத்தினுள் ஆழ்குழாய் கிணறு, மின்மோட்டார், மேல்நிலைத்தொட்டி மற்றும் நீர்க்குழாய் அமைப்பு	மிதிலைப்பட்டி இரணிக் கோயில் நகரத்தார்கள்
4	கோபுரம் ஆயில் பெயிண்டிங்	திரு. கரு. அண்ணமலை செட்டி யார் அவர்கள் குருவிக் கொண் டான் பட்டி
5	மின்சாதனங்கள் அமைப்பு. ஒயரிங்.	திரு. பழ. ப. கரு. மது. சி. விஸ்வ நாதன் அவர்கள், மிதிலைப்பட்டி
6	மின் உபகரணங்கள்	திருமதி M.S. வள்ளியம்மைஆச்சி குழிபிறை K. ஆனந்தகுமார் M.D. டாட்பெல்லாப்பூர் ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட் மெ. ய. மெ. குடும்பத்தார் காரைக்குடி
7	மதில்சுவர், மகாமண்டபச்சுவர் சீரமைப்பு	திரு. சொ. அ. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் குருவிக் கொண்டான்பட்டி.
8	அம்மன் கருவறை, பரிவார சன்னதி பீடங்களில் பளிங்குகற்கள் பதித்தல்	திரு. வெ. மா. பழனியப்ப செட்டியார் அவர்கள், செவ்லூர்
9	கோவில் தளம் சீரமைப்பு	திரு. கா. பழ. சோம. சி. நாச்சியப்பசெட்டியார் அவர்கள், வலையபட்டி.
10	உணவுக்கூடம்	திரு. வி. பழ. சண்முகநாதன் செட்டியார் அவர்கள் பூலாங்குறிச்சி திரு. மது. கும. நடராஜன் செட்டி யார் அவர்கள் வலையபட்டி.
11	யாகசாலை பூஜை சாமான்கள் வகையறா	திரு. ஆ. வி. ப. முரு. மு முரு. லெ. முருகப்பசெட்டியார் அவர்கள் காரைக்குடி. திரு. அண. ஆண்டியப்பசெட்டியார் அவர்கள், ராங்கியம். திரு. வி சொ. சுப்பையா செட்டியார் அவர்கள், திருமதி தமயந்தி ஆச்சி, அவர்கள், பூலாங்குறிச்சி.

12	மருந்து சாத்துதல்	திரு. S. தியாகராஜன் செட்டியார் அவர்கள், குருவிக்கொண்டான் பட்டி.
13	பிராமணாள் மற்றும் யாகசாலை வஸ்திரங்கள்	திரு. பழ. ராம. மு. சிங்காரம் செட்டியார் அவர்கள், மிதிலைப்பட்டி
14	உலோக வகைகள் நவரத்தின செட் (3)	திரு. மெ. ராம. சொ. வீரப்பச்செட்டியார் அவர்கள். காரைக்குடி.
15	நாதஸ்வரம்	திரு. பழ. சுப்பையா செட்டியார் அவர்கள் பூலாங்குறிச்சி
16	ஒலி, ஒளிஅமைப்பு, ஜெனரேட்டர்,	திரு. அரு. சொ. அழகப்பச் செட்டியார் அவர்கள் குருவிக்கொண்டான் பட்டி
17	பிராமணாள் போஜனம்	திரு. நா. கருப்பையா செட்டியார் அவர்கள் குழிபிறை
18	காலை உணவு	திரு.மெ.லெ. மெய்யப்ப செட்டியார் அவர்கள் காரைக்குடி
19	மதிய உணவு	திருமதி ப.வ. அழ குழ வி. உமையாள் விஸ்வநாதன் அவர்கள் ராயவரம்.
20	மாலை ஸ்வீட், காரம், காபி	திரு. அ. முரு. நாகப்பசெட்டியார் அவர்கள் காரைக்குடி.
21	தண்ணீர்ப் பந்தல்கள்	திருமதி சித. சுப. மணிமேகலை ராமநாதன் அவர்கள், ராயவரம். திரு மது. கதி சொ. கதிரேசன்செட்டியார் அவர்கள், குருவிக்கெண்டான் பட்டி

பட்டர்கள் முகவரியும், இதர விபரங்களும்

பூஜை செய்யும் பட்டர்கள் :

1 திரு. உல. துரைசாமிபட்டர்
2 திரு. கரு. முருகையாபட்டர்
3 திரு. தரு. அம்பிகாபதிபட்டர்
4 திரு. சுப. மாணிக்க பட்டர்
5 திரு. அழ. சுப்பையாபட்டர்

முகவரி :

(பட்டர்கள் யாராவது ஒருவர் பெயர்)
உலகநாயகிபுரம்
குழிபிறை—622 402.
புதுக்கோட்டை மாவட்டம்.

குறிப்பு :

1 அபிசேகம் செய்ய முன்னேற்பாடு வேண்டியதிருந்தால் மேற்கண்ட விலாசத்திற்கு யாராவது ஒருவருக்கு முன்னதாக கடிதம் எழுதினால் வேண்டிய ஏற்பாடுகள் செய்வார்கள்.

2 தினசரி காலை 10-00 மணிமுதல் மதியம் 2-00 மணிவரை பட்டர்கள் ஆலயத்தில் இருப்பார்கள்.

3 திங்கள், செவ்வாய், வெள்ளி ஆகிய நாட்கள் அம்மனுக்கு உகந்த கிழமைகளாகும்.

4 காலை 7-30 மணி, மாலை 5-15 மணி ஆகிய இரு நேரங்களில் மட்டும் புதுக்கோட்டையிலிருந்து செவலூர் கிராமத்திற்குச் செல்வதற்கு டவுன்பஸ் வசதி உள்ளது (பஸ் நம்பர் 6A). மற்ற நேரங்களில் விளக்கு ரோட்டிலிருந்து நடந்து செல்ல வேண்டும்.

ஸ்தல வரலாறு

பார் போற்றும் பாண்டி மண்டலத்தில் கோனாட்டில், புதுக்கோட்டை சமஸ்தானத்தைச் சேர்ந்த திருமயத்தை அடுத்து குழிபிறையிலிருந்து 4 கிமீ தூரத்தில் செவலூர் அமைந்துள்ளது. நமது முன்னோர்கள் இவ்வூரை வானம், அந்தரம், பூமி என முப்பெரும் பகுதிகளாக வகைப் படுத்தினர். வானுயர்ந்த காஞ்சாத்து மலை மீது அருள்மிகு காசி விஸ்வநாதர், விசாலாட்சி அம்மையார் சமேதராகவும் அதனை அடுத்து ஆண்டா மடமும், அருகம்பூஞ்சுனையும் அமைந்த அந்தரத்தில் அருள்மிகு அந்தரேஸ்வரர் ஈஸ்வரியுடனும் இவ் விரண்டுக்கும் கீழே உள்ள விளைநிலப் பகுதியை பூமியாகக் கொண்டு அருள் மிகு பூமிநாத ஈஸ்வரர் சிவகாமி அம்மையாருடன் சமேதராகவும் எழுந்தருளி உள்ளனர். இவ்வாறு இத்திருத்தலத்தில் மூன்று சிவாலயங்கள் அமைந் திருப்பது குறிப்பிடத்தக்க சிறப்பு அம்சமாகும்

வானளாவிய காஞ்சாத்து மலையின் உச்சியின் மீது ஆறுமுகக் கடவுள் கோயில் கொண்டு சேவல் கொடியோடு வீற்றிருப்பதால் இவ்வூரை சேவலூர் என்று அழைத்து வருகின்றனர்.

அன்னையவள் செவலூர் செவிலி கண்மாயின் மேற்கு பகுதியில் உள்ள மேல் தளத்தில் மதுக்காரைச் செடியின் அடியில் இருந்து தோன்றியதால் அம்பிகைக்கு அருள்மிகு மதுக்காரநாச்சி என்னும் பெயர் வழங்கி வருகிறது. இத் திருத்தலத்தில் முறையே 1942 1960 1973ஆம் ஆண்டுகளில் கும்பா பிசேகம் நடைபெற்றுள்ளது. தற்போது திருப்பணிகள் சீர்பட செய்தும், முன் மகாமண்டபம் எழிலுற எழுப்பியும், அருள்மிகு அன்னை மதுக்காரநாச்சி யம்மனுக்கும், பெரிய கருப்பர், சின்னக் கருப்பர் மற்றும் பரிவார தேவதை களுக்கும் நிகழும் **பிரமோதூத ஆண்டு ஆவணித் திங்கள் 17ஆம் நாள் 2—9—90 ஞாயிற்றுக்கிழமை காலை 6க்கு மேல் 7 மணிக்குள்** துவாதசி திதி, உத்திராட நட்சத்திரம் அமிர்த யோகம் கூடிய சுபதினத்தில் உதயாதி நாழிகை 2-1/2க்குள் சிம்ம லெக்னம் ஜெய வேளை பஞ்சக சுத்தமான சுப முகூர்த்தத்தில் **திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா நடைபெற்றது.**

உ
சிவமயம்

திருக்கோவில் திருப்பணிகள்

[திருப்பணிகள் பற்றிய விபரத் தொகுப்பு]

திருப்பணி: செவலூர் அருள்மிகு மதுக்கார நாச்சியம்மன் ஆலயத் தல வரலாற்றைத் தொடர்ந்து. இந்த ஆலயத்துடன் தொடர்புடைய சுவை மிக்க தகவல்களையும் தொடக்கம் முதல் இதுவரை செய்யப்பட்டுள்ள திருப் பணி விபரங்களையும் தொகுத்துத் தருவதில் நம்மவர் அனைவரும் பெருமை யும், பேரின்பமும் கொள்வார்கள் என நம்புகிறோம்.

வழிபடும் அன்பர்கள் : செவலூர் மற்றும் சுற்றுப்புற கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் பலரும்; காரைக்குடி, குருவிக்கொண்டான்பட்டி. ராங்கியம், மிதிலைப்பட்டி, செவ்வூர், குழிபிறை, பூலாங்குறிச்சி, வலைய பட்டி, கொத்தமங்கலம், அரிமளம், கொப்பனாபட்டி ஆகிய ஊர்களைச் சேர்ந்த சுமார் 250 புள்ளிகளைக் புள்ளிகளைக் கொண்ட நகரத்தார் பெரு மக்களும் அன்னையைக் குலதெய்வமாக வழிபட்டு வருகிறார்கள். சென்ற பல ஆண்டுகளாக தனித்தனியாக வழிபட்டு வந்தவர்கள் இந்தத் திருப்பணி யில் இப்போது ஒன்று சேர்ந்து கூட்டு வழிபாட்டில் ஈடுபட்டு மதுவநாயகி அம்மையின் அருள் வெள்ளத்தில் மூழ்கித் திழைக்கிறார்கள்.

மூன் திருப்பணிகள் : அம்பிகையின் ஆலயம் எழுந்த பிறகு இங்கு பல திருப்பணிகள் நடைபெற்றுள்ளன. 1942 ஆம் ஆண்டு காரைக்குடி திரு. மெய. மெ. மெய்யப்பச் செட்டியார் அவர்கள் உதவியால் திருப்பணிக்கு வேண்டிய பொருளைத் திரட்டி. காரைக்குடி திரு. பழ. முரு. அ. முருகப்பச் செட்டியார் அவர்சள் பொறுப்பேற்க, காரைக்குடி அக்கினி ஆத்தாள் படைப்பு நகரத்தார்களால் ஆலயத்திற்கு மதிள்சுவர் கட்டி மற்றத் திருப்பணி களும் செய்து 1942 ஞ் மே மீ 7உ கும்பாபிஷேகம் செய்யப் பெற்றது. அதுசமயம் செவலூர் திரு. பழனியப்பத் தேவர் அவர்கள் அதில் உறுதுணை யாக இருந்து பணியாற்றினார்.

1960 ஆம் ஆண்டு மற்றுமொரு கும்பாபிசேகம் செய்யப் பெற்றது.

1973 ஆம் ஆண்டு செவலூர் திரு. பெ எ. அ. மதுவத்தேவர் அவர்கள் பெருமுயற்சியால், காரைக்குடி திரு. வீர. மெ. மெய்யப்பசெட்டியார் அவர் கள் காரைக்குடி திரு. ப. மெ. மெ. கணேசன் செட்டியார் அவர்கள் மிதிலைப்

பட்டி திரு. பழ. கரு. கதிரேசன்செட்டியார் அவர்கள் ஆகியோர் முன்னின்று திருப்பணி வேலைகளைத் திறம்படச் செய்து 1973 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 7ஆம் தேதி கும்பாபிஷேகத்தைச் சிறப்பாக நடத்தினார்கள்

காரைக்குடி திரு. மெ. சொக்கலிங்கம் செட்டியார் அவர்களின் பொருளுதவியால் ஆலயத்தின் பிரகாரத்தின் வெள்ளைக்கல் நடைபாதை அமைக்கப் பெற்றது.

குருவிக்கொண்டான்பட்டி இரணிக்கோயில், செங்கடாக் கருப்பையா படைப்பு நகரத்தார்களால் ஆலயத்தின் முன்பகுதியில் ஆழ்குழாய்க்கிணறு அமைக்கப்பெற்று. மேற்படி குழாயும் 3—9—1989 முதல் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திருப்பணி ஆலயத்திற்கு நீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் கற்பகவிருட்சமாகத் திகழ்ந்து வருகிறது.

அம்பாளுக்கு மதிப்புமிக்க உற்சவவிக்கிரகம் ஒன்று ஐம்பொன் உலோகத்தில் முன்னோர்களால் செய்துவைக்கப்பட்டு செவலூரில் உள்ள சிவாலயத்தில் இந்து அறநிலையத்துறை பாதுகாப்பின் கீழ் இருந்து வருகிறது. மற்றும் அம்பிகைக்கு வெள்ளி அங்கியும் பெரிய கருப்பர், சின்னக் கருப்பர், ஆகிய காவல் தெய்வங்களுக்கு வெள்ளிக்கிரீடங்களும் அன்பர்கள் பலரின் பொருளுதவியாலும் காரைக்குடி அக்கினி ஆத்தாள் படைப்பு நகரத்தார்களாலும் செய்து வைக்கப் பட்டுள்ளது.

மிதிலைப்பட்டி பழ. மு. குடும்பத்தார்கள் ஆலயத்தின் மேற்குப்பகுதியில் அரசமரத்தின் கீழ் பிள்ளையார் கோவில் ஒன்று அமைத்தும் கிழக்குப் பகுதியில் விடுதியும், நந்தவனமும் அமைத்தும் சிறப்பாகப்பராமரித்து வருகிறார்கள்.

இவை தவிர மற்றும் பல அன்பர்கள் சிறுசிறு திருப்பணிகள் செய்தும் கோவிலுக்கு வேண்டிய சாமான்கள் பல தந்தும் அன்னையின் அருளுக்குப் பாத்திரமாகியிருக்கிறார்கள்.

இப்பொழுது நடைபெற்றுள்ள திருப்பணி விபரம்: கடந்த ஓராண்டு காலமாக அன்னையின் ஆலயத்திற்கு கும்பாபிஷேகம் செய்ய நகரத்தார்களும் ஊர்மக்களும் பெருமுயற்சி எடுத்துக்கொண்டனர். சென்ற ஆண்டு முதல் ஆலயத்திற்கு வருபவர்களிடம் இருந்து அவர்களது முகவரிகள் சேகரிக்கப்பட்டன. 6-3-90 அன்று காரைக்குடி நகரத்தார்கள் வருட அபிஷேகத்திற்காக செவலூர் ஆலயத்திற்கு வந்தபொழுது கும்பாபிஷேகம் செய்வதற்கு சாமி அழைத்துக் கேட்டு உத்தரவு பெறப்பட்டது. 20-4-90 அன்று காரைக்குடி அக்கினி ஆத்தாள் படைப்பு நகரத்தார்கள் கூடி கும்பாபிஷேகத் திட்டம் பற்றி ஆலோசனை செய்து மற்ற ஊர் நகரத்தார்களையும் இந்தத் திருப்பணியில் பங்குபெறச்செய்து சிறப்பாக நடத்தலாம் என்று முடிவு செய்யப்பட்டது. 6-6-90 அன்று காரைக்குடி ஸ்தபதி திரு. S சண்முகம் அவர்களை அழைத்துச்சென்று செவலூர் ஆலயத்தில்

திருப்பணி தொடர்பான விபரங்களை மதிப்பீடு செய்து கொண்டு. அன்றைய தினமே காரைக்குடி நகரத்தார்களும், செவலூர் ஊரார்களும், அனைத்து ஊர் நகரத்தார்களையும் சென்று பார்த்து கும்பாபிஷேகத்திட்டம் பற்றி எடுத்துரைத்து அனைவருடைய ஒத்துழைப்பும் பெறமுயற்சி செய்யப்பட்டது சென்ற இடங்களிலெல்லாம் அனைவரும் இன்முகத்துடன் வரவேற்று உப சரித்து இந்தத் திருப்பணியை சிறப்பாக நடத்த ஒத்துழைப்புத் தருவதாக ஒருமனதாக உறுதி கூறினார்கள். அதன் பேரில் நகரத்தார் புள்ளிவரி நன்கொடை, திருப்பணி நன்கொடை, பரிசுச்சீட்டு, விளம்பரமலர், ஏலம் ஆகிய வழிகளில் அன்னையின் ஆலயததிருப்பணிக்கு வேண்டிய பொருள் திரட்ட வழிவகுக்கப்பட்டது. 13-6-90 பிரமோதுத ஆண்டு வைகாசித் திங்கள் 30ஆம் நாள் புதன்கிழமை காலை 6-30 மணிக்கு மேல் 7-30 மணிக் குள் செவலூர் ஆலயத்தில் ஸ்தபதி அவர்களால் தச்சு முகூர்த்தம் செய்யப் பட்டு திருப்பணி வேலை துவங்கப்பட்டது. அது சமயம் நகரத்தார்கள் பலரும் ஊராரும் ஆலயத்திற்கு வந்திருந்து வேலையைத் தொடங்கி வைத் தார்கள். இதன் பிறகு காரைக்குடி நகரத்தார்கள் வெளியூர் நகரத்தார்களை நேரடியாகச் சென்று பார்த்தும் கடிதம் மூலம் தொடர்பு கொண்டும் திருப் பணிக்கு வேண்டிய பொருளைத் திரட்டுவதற்கான பெரும் முயற்சியில் ஈடு பட்டார்கள்.

22. 7. 90 அன்று ஆலயத்தில் அனைத்து ஊர் நகரத்தார்களும் ஊரார்களும் முதன்முதலாக ஒன்றுகூடி திருப்பணி தொடர்பான திட்டங்களை ஆலோசனை செய்து மேற்கொண்டு செய்ய வேண்டிய பணிகள் திட்டமிடப் பட்டன. இக் கூட்டத்தில் முதலாவது நகரத்தார்கள் நிர்வாகக் குழு தேர்வு செய்யப்பட்டது. பிரமோதுத ஆண்டு ஆவணித் திங்கள் 17ஆம் நாள் (2. 9. 90) ஞாயிற்றுக் கிழமை கும்பாபிஷேகம் செய்வது என்று நாள் குறிப்பிடப்பட்டது. திருப்பணி தொடர்பான வேலைகளை காரைக்குடி திரு. அ. முரு. நாகப்பச் செட்டியார் அவர்கள் தொடர்ந்து பொறுப்பேற்று நடததுவது என்று அனைத்து ஊர் நகரத்தார்களாலும் ஒரு மனதாகத் தீர்மானிக்கப்பட்டது. 15. 8. 90 அன்று மீண்டும் நிர்வாகக்குழு உறுப் பினர்கள் கூட்டம் காரைக்குடி திரு. அ. முரு நாகப்ப செட்டியார் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. இவ்விரு கூட்டங்களிலும் செய்யப்பட்ட முக்கியத் தீர்மானங்கள் இம் மலரில் "நகரத்தார் தீர்மானங்கள்" என்ற தலைப்பில் இடம் பெற்றுள்ளது. 1. 8. 90 அன்று கும்பாபிஷேகத்திற்கு முகூர்த்தக்கால் நாட்டப்பட்டு கும்பாபிஷேகப் பணிகள் விரைவு படுத்தப் பட்டன.

இரு முக்கியப் பணிகள் :

ஆலயத்தில் கருப்பர் பீடம் உயர்த்துவதும், அம்மன் எழுந்தருளச் செய்வதும் இந்தத் திருப்பணியில் முக்கிய செயல்களாக இடம் பெற்றன அதில் சில சிரமங்களும், இடையூறுகளும் இருந்ததால் அதற்கு தீர்வு காண வேண்டிய அவசியம் ஏற்பட்டது. 120 ஆண்டுகளுக்குப் பிறகு அம்மனின் உற்சவ விக்கிரகத்தை எழுந்தருளச் செய்வதில் பல நியதிகள் இருந்ததால்

அவை அனைத்தையும் தெளிவுபடுத்தி அம்மன் புறப்பாட்டிற்கு ஏற்பாடு செய்ய வேண்டி இருந்தது. தஞ்சை — அம்மன் பேட்டை கிராமத்தைச் சேர்ந்த உயர்திரு கருப்பையா ஜோதிடர் அவர்களிடம் சென்று மேற்படி விஷயங்கள் தொடர்பாக விவரம் கேட்கப்பட்டது. அவர்கள் கூறியதிலிருந்து ஆலயத்தில் சின்னக் கருப்பர் சக்தி இழந்திருப்பதையும், வேறு சில குறை பாடுகள் இருப்பதையும் அறிந்து ஜோதிடரின் வழிகாட்டுதலின்படி சில பரிகாரங்கள் செய்து குறை குற்றங்களை நீக்கி சிறப்பாக கும்பாபிஷேகம் செய்ய முயற்சி செய்யப்பட்டது அவர்கள் கூறியபடி காரைக்குடி திரு. ப.மெ. மெ கணேசன் செட்டியார் அவர்களும், மற்ற ஊரார்கள் சிலரும் சாமியாடிகள் இருவரும் ஸ்ரீரங்கம், கொல்லி மலை, கரந்த மலை ஆகிய இடங்களுக்குச் சென்று பல சிரமங்களுக்கு இடையே தக்க பரிகாரங்களைச் செய்து பிடிமண் தீர்த்தம் கொண்டு வந்து, ஆலயத்தில்வைத்து சின்னக்கருப்பர் சக்தி பெறவும் மற்ற காரியங்கள் சிறப்பாக நடக்கவும் வழி செய்யப்பட்டது. அதன்பிறகு கருப்பையா, ஜோதிடர் அவர்களும் ஆலயத்திற்கு வருகை தந்து விஷேட பூஜைகள் செய்து கருப்பர் பீடம் உயர்த்துவதற்கும், அம்மன் புறப் பாட்டிற்கும் அன்னையின் உத்தரவு பெறப்பட்டது. இதன் பிறகு பல பிரச்சனைகளுக்குத்தீர்வு காணப்பட்டு அனைத்துத்தரப்பினரிடமும் தெளிவு ஏற்பட்டது. இதற்குப் பின் கருப்பர் பீடம் உயர்த்துவதிலும் அம்மன் புறப் பாட்டிலும் முழு முயற்சியுடன் ஈடுபட்டு அன்னையின் அருளால் எல்லாம் சிறப்பாக நடைபெற்றது. ஜோதிடரின் பணி அனைவராலும் போற்றத் தக்கதாகும்.

திருப்பணியில் முக்கியப் பங்கேற்றவர்கள்:-

இத் திருப்பணியில் காரைக்குடி திரு. அ. முரு. நாகப்ப செட்டியார் அவர்கள் முக்கியப் பொறுப்பேற்று திருப்பணி வேலைகளை முன்னின்று நடத்தினார்கள். திரு. ப. மெ. மெ. கணேசன் செட்டியார் அவர்கள் தொடக்கம் முதல் முழு உற்காசத்துடன் ஈடுபட்டு கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற உறுதுணையாக இருந்தார்கள். திரு. நா. நாச்சியப்பன் [(Rajan Corporation TRICHY] அவர்கள் திருப்பணி வேலைகளைத் திட்டமிட்டு ஒருங்கிணைப்பதிலும், அனைத்து ஊர் நகரத்தார்களை ஒன்று சேர்ப்பதிலும், பொருள்திரட்டுவதிலும் பெரும் பங்காற்றினார்கள். காரைக்குடி திரு. அ. முத்து. அ.கரு.சண்முகம்செட்டியார் அவர்களும், திரு சொ.வீரப்பசெட்டியார் அவர் களும் வெளியூர் நகரத்தார்கள் அனைவரையும் நேரடியாகச்சென்று பார்த் தும், கடிதம் மூலம் தொடர்பு கொண்டும், பெரும் பொருள் திரட்டுவதில் பேரு தவி புரிந்தார்கள். குருவிக் கொண்டான்பட்டி திரு. சொ. அண்ணாமலை செட்டியார் அவர்களும் திரு. சொ. அ சொக்கலிங்கம் செட்டியார் அவர்களும், ராங்கியம் திரு. பழ. ஆ. ஆண்டியப்பச் செட்டியார் அவர்களும், திரு. சொ. சுப்ரமணியம் செட்டியார் அவர்களும், மிதிலைப்பட்டி திரு அண. முத்தையா செட்டியார் அவர்களும், பூலாங்குறிச்சி திரு வி. சொக்கலிங்கம் செட்டியார் அவர்களும் அறநிலையத்துறையில் பணியாற்றும் திரு S பழனியப்பன் அவர் களும், வலையப்பட்டி திரு பழ.ராமலிங்கம் செட்டியார் அவர்களும், திருப்பணி

வேலைகளில் உற்காசத்துடன் ஈடுபட்டு அனைவரையும் ஊக்குவித்தார்கள். குழிபிறை அமரர் திரு. நா. கரு. கருப்பஞ் செட்டியார் அவர்களும், திரு. ராம. நா. சேக்கப்பச் செட்டியார் அவர்களும், திருப்பணி வேலைகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டு, கும்பாபிஷேகத்திற்கு வருபவர்கள் தங்குவதற்கும், பிராமணர் போஜனவசதிக்கும், போக்குவரத்து வசதிக்கும், குழிபிறையில் தக்க ஏற்பாடுகளைச் செய்து பேருதவி புரிந்தார்கள். குருவிக் கொண்டான் பட்டி திரு. அரு சொ அழகப்பச்செட்டியார் அவர்கள் காதுக்கினிய நாதஸ்வர இசை, கண்ணுக்கினிய ஒளியலங்காரம், நாவிற்கினிய சமையல் ஏற்பாடுகள் ஆகியவற்றை நல்ல முறையில் செய்து அனைவரின் பாராட்டுதலையும் பெற்றார்கள்.

அனைத்துக்கும் சிகரம் வைத்தது போல் நம் தாய்நாட்டிற்கு வெளியே, கடல்கடந்து, மலேயா நாட்டில் மிதிலைப்பட்டி திரு. J. P. வே லெக்ஷ்மணன் செட்டியார் (சிரம்பான்) அவர்களும் ஷியார் சகோதரர் திரு. வே. முத்தையர் செட்டியார் அவர்களும் மிதிலைப்பட்டி திரு. சிவ. பெருமாள் செட்டியாா (ஈப்போ) அவர்களும், குருவிக் கொண்டான்பட்டி, திரு. பழ. சொக்கலிங்கம் செட்டியார் (பினாங்கு) அவர்களும், மிகுந்த உற்சாகத்துடன் அனைத்து ஊர் நகரத்தார்களையும் ஒன்று கூட்டி அன்னையின் ஆலயத் திருப்பணிக்கு பெரும் பொருள் திரட்ட வழி செய்தார்கள். அவர்களுடைய ஊக்கமும், உழைப்பும் இங்கு திருப்பணியில் ஈடுபட்ட அன்பர்களுக்கு, பெரும் உற்சாகத்தை அளித்து வேலைகளை விரைவுபடுத்தி, குறிப்பிட்ட காலத்தில் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற அடிப்படையாக அமைந்தது.

பெரும்பொருளை வகைப்படுத்தி திருப்பணி வேலைகளை சிறப்பாகத் திட்டமிட்டு செயல்படுத்த முனைந்த நகரத்தார்களுக்கு ஊரார்களின் ஒத்துழைப்பு பெரும் உற்சாகத்தை அளித்தது. ஊர் அம்பலக்காரர் திரு. பெ. ஏ. அ. மதுவத்தேவர் அவர்களும், அவர்களுடைய சகோதரர் திரு. அழகப்பத் தேவர் அவர்களும், மிகுந்த உற்சாகத்துடன் திருப்பணி வேலைகளில் ஈடுபட்டனர். ஊர் மணியகாரர் திரு ராம. சுப்பையா தேவர் அவர்களும், திரு. அ. கருப்பையாக்கோனார் அவர்களும் தங்களுடைய பல்வேறு அலுவல்களையும் ஒதுக்கி வைத்து விட்டு திருப்பணி வேலை நடைபெற்ற காலம் முழுதும் அன்னையின் ஆலயத்திலேயே இருந்து வேலைகளை நெறிப்டுத்தி சிக்கனமாகவும், சிறப்பாகவும் பணி நிறைவு பெற ஊரார்களை ஒன்றுபடுத்திச் சிறப்பாக செயல்பட்டார்கள். அவர்களது பணி அனைவராலும் போற்றத் தக்கது. மேலும், திரு, பழ, வெள்ளக்குட்டித் தேவர் அவர்களும், திரு ச. சோலையப்பதேவர் அவர்களும்திரு. சின்னய்யாத்தேவர் அவர்களும், திரு. பெரி பழநியப்பத் தேவர் அவர்களும் திரு. சி. பூ. ச. ஆவடித்தேவர் அவர்களும், திருப்பணி வேலைகளில் முக்கியப்பங்கேற்றுச்சிறப்பாகச்செயல்பட்டார்கள்.

சிறப்பான திருப்பணிகள் :-

இப்போது நடைபெற்ற திருப்பணியில் பூலாங்குறிச்சி வி. பழ. வி. குமாரர்கள் அழகிய நுழைவாயில் அமைத்து அன்னையின் ஆலயத்திற்கு

எழில் ஊட்டி இருக்கிறார்கள். மிதிலைப்பட்டி இரணிக் கோயில் நகரத்தார்கள் பெரும் பொருட் செலவில் முன்மண்டபம் அமைத்து ஆலயத்தைப் பொலிவு பெறச் செய்துள்ளார்கள். கோபுரத்தில் அழகிய வேலைப்பாடுகள் செய்து பஞ்சவர்ணம் வைக்கப்பட்டுள்ளது. மண்டபங்களிலும், கருப்பர் பீடத்திலும் சுடப்பைக்கல் பதிக்கப்பட்டுள்ளது. அம்மன் கருவறைச் சுவற்றிலும் இதர சன்னதி பீடங்களிலும் பளிங்குக்கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. மடப்பள்ளி சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது. வருபவர்கள் தங்கி உணவு அருந்துவதற் காக தனிக்கூடமும் அமைக்கப்பட்டுள்ளது. மிதிலைப்பட்டி இரணிக்கோயில் நகரத்தாகள் பொருளுதவியால் ஆலயத்தின் உள்பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட்டு மின்மோட்டார் பொருத்தப்பட்டுள்ளது. மேல் நிலைத்தொட்டியும், நீர்க்குழாய்களும் அமைக்கப்பட்டு ஆலயத்திற்கு வேண்டிய தண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளது. இப்பணி குறிப்பிடத்தக்க தலையாய பணியாகும். அம்மன் சன்னதியில் புதிதாக யாளி பிரதிஷ்டை செய்யப்பட்டு பலிபீடமும் அமைக்கப்பட்டுள்ளது. பலரின் பொருளுதவி யால் மின் உபகரணங்கள் பொருத்தப்பட்டு மின் ஒளி வசதி செய்யப்பட்டு உள்ளது. இதில் மிதிலைப்பட்டி திரு சி.விசுவநாதன் அவர்கள் சிறப்பாக பணியாற்றினர். இதர மராமத்து வேலைகளும் செய்யப்பட்டு அழகிய வண்ணம் தீட்டி அன்னையின் ஆலயம் புத்துயிர் பெற்று பொலிவுடன் திகழ்கிறது.

இப்பணிகளையெல்லாம் மூன்று மாத காலத்திற்குள் திட்டமிட்டுச் சிறப்பாக செய்து கொடுத்துள்ள காரைக்குடி ஸ்தபதி திரு. S. சண்முகம் அவர்கள் அனைவருடைய பாராட்டுக்கும் உரியவர். வேந்தன்பட்டி நந்தீஸ்வரர் கோயில், பலவான்குடி சிவன்கோயில், காரைக்குடி தமிழ்த்தாய் கோயில் ஆகியவை ஸ்தபதி அவர்களின் கைவண்ணத்தில் பொலிவுபெற்ற ஆலயங்கள் ஆகும். மேலும், அமராபதி புதூர் சிவாலயமும், மேலச்சிவல்புரி சிவாலயமும் இப்போது ஸ்தபதி அவர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள பெரும் திருப்பணி கள் என்பது குறிப்பிடத்தக்கது. குறுகிய காலத்திற்குள் நம்முடைய ஆலயத் திருப்பணி எதிர்பார்த்ததைவிட சிறப்பாக அமைய அவர்களது அயராத உழைப்பும், ஆர்வமும் அடிப்படையாக அமைந்தன.

திருப்பணி நிறைவு:-

பிள்ளையார்பட்டி திரு டாக்டர் K பிச்சைக் குருக்கள் அவர்களுடைய ஆசியுடன் துவங்கப்பட்ட இத்திருப்பணி சிறப்பாக நிறைவுபெற்றது. பிரமோதூத ஆண்டு ஆவணித்திங்கள் 14ஆம் நாள் (30-8-90) வியாழக்கிழமை மாலை விக்னேஸ்வர பூஜையுடன் விழா துவங்கியது 31-8-90 வெள்ளிக்கிழமை காலை கடஸ்தாபனம் செய்யப்பட்டது, அம்பிகைக்கு ஐந்து குண்டங்களும், பரிவாரத் தேவதைகளுக்கு நான்கு குண்டங்களும், ஆக ஒன்பது குண்டங் களுடன் யாகசாலை அமைக்கப்பட்டது. (31-8-90) மாலை முதல் (2-9-90) ஞாயிற்றுக் கிழமை அதிகாலை வரை நான்கு கால யாகபூஜை நடைபெற்றது (1-9-90) சனிக்கிழமை இரண்டாம் கால யாகபூஜையின் போது கோவிலூர்

ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ காசிவிஸ்வநாத ஞானதேசிக சுவாமிகள் அவர்கள் ஆலயத்திற்கு வருகை தந்து சிறப்பித்ததுடன், விழா சிறப்பாக நிறைவுபெற ஆசி வழங்கினார்கள். பிரமோதூத ஆண்டு ஆவணித் திங்கள் 17ஆம் நாள்(2-9-90) ஞாயிற்றுக்கிழமை காலை 6மணிக்கு மேல் 7மணிக்குள் வேத விற்பன்னர்களின், வேதமந்திரங்கள் விண்ணை எட்டவும், தேவாரத் திருமுறைப் பாராயணம் திக்கெட்டும் பரவவும், மங்கல இசை முழங்கவும், நன்னிலம் திரு இரா. கோகுல் அவர்கள் கற்கண்டினும் இனிய செந்தமிழ்ச் சொற்கொண்டு நேர்முக வர்ணனை செய்யவும், மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நிறைவு பெற்றது. அன்று இரவு அம்மன் புறப்பாடு சீரோடும், சிறப்போடும் நடைபெற்றது அன்று முதல் 48 நாட்கள் மண்டலபூஜை நடைபெற்று பிரமோதூத ஆண்டு, ஐப்பசித்திங்கள் இரண்டாம்நாள்(19-10-90)வெள்ளிக்கிழமை அன்று நிறைவு செய்யப்பட்டது. அனைவரும் ஆர்வத்துடன் ஈடுபட்டு அயராது உழைப்பையும் அளவற்ற பொருளையும் வழங்கி அன்னையின் ஆலயத் திருப்பணியை இனிதே நிறைவு செய்து மதுவ நாயகி அம்மையின் அருளுக்குப் பாத்திரமாகி இருக்கிறார்கள். செயற்கரிய செயலாக கருப்பர் பீடம் உயர்த்தப்பட்டதும் பல ஆண்டுகளுக்குப் பிறகு அம்மன் புறப்பாடு செய்ததும், பல ஆண்டுகளாக, மழையில்லாமல் இருந்த செவலூர், கிராமத்தில் மகாகும்பாபிஷேகத்திற்குப் பிறகு, மழை பெய்து சேங்கையில் நீர் சேர்ந்ததும் இந்தக் கும்பாபிஷேகம் தெய்வ சாட்சியாக அங்கீகரிக்கப்பட்டதற்கு, சிறந்த ஆதாரங்கள் என்று குறிப்பிடுவது சாலப்பொருத்தமுடையதாகும்.

''எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும்-இங்கு
இல்லாமை இல்லாத நிலைவேண்டும்''

என்று கவியரசரின் வழிநின்று அனைவரின் வாழ்வும், வளமுடன் சிறக்க அன்னையின் அருளை வேண்டிப் பிரார்த்தித்து நிறைவு செய்கிறோம்.

—தொகுப்பு

நா. முருகப்பன் (இராதா)

காரைக்குடி

ம ெ ெ

உ

சிவமயம்

விநாயகர் வணக்கம்

ஆயனின் தங்கையனை அழகி மதுவ நாச்சியனை
வாயாரப் பாட சில வாக்கியங்கள் தீட்டுதற்கு
தியனூர்ஆள் மன்னா துங்கக் கரிமுகனே
தூயாநின் ஒரு கையைத் தூரிகையாய்த் தாராயோ!

திருப்பள்ளி எழுச்சி


புள்ளினம்கூவி உன்நல்லருட் புகழ்கூறி
பூபாளம் இசைக்குதம்மா
அள்ளிவரும் மயில் உனைக் காணவே வாயிலில்
அகிலமே சூழ்ந்ததம்மா
தெள்ளிய கங்கைநதி தேவி உனை நீராட்டத்
தேடியே வந்ததம்மா — எம்
உள்ளே ஒளிர்குன்ற ஒளிமயமே செவ்வல் நகர்
உமையே கண் மலர்ந்திடம்மா!
கவ்வும் இருளதனைக் கலைத்திங்கு செங்கதிரோன்
கலைகள் பரப்பி வந்தான்
ஒவ்வும் புகழ்ச் சொல்லால் உவந்தொரு கவிபாடி
உள்ளம் நெகிழ்ந்து நின்றான்
வெவ்வேறு ஊர்களில் நீ விளைத்த பொன்மணிகள்
இவ்வூரை நாடி வந்தார்
செவ்வூர்ப் பதியுரை ஸ்ரீ மதுவ நாச்சிஉன்
சேல் விழிகள் திறவாய்!

மலரே வடிவான மதுக்கார நாச்சியம்மை

தேவிஉடல் தாழம்பூ தேன்மணக்கும் மகிழம்பூ
தித்திக்கும் செவ்விதழோ அன்றலர்ந்த மாதுளம்பூ
உள்ளத்திலே பூத்திருக்கும் வெள்ளை நிற மல்லிகைப்பூ
உதட்டிடுக்கில் சிரித்திருக்கும் ஒருகோடி முல்லைப்பூ
கண்ணங்களோ ரோஜாப்பூ கவின்நாசி செண்பகப்பூ
காதுகளோ பாரிஜாதம் கண்களோ நீலோத்பலப்பூ
அரவணைக்கக் காத்திருக்கும் அவள் கரங்கள் அல்லிப்பூ
அழகொளிரும் தாமரையாம் அவள் பதத்தை நீ விரும்பு

அருள்மிகு மதுக்கார நாச்சியம்மன்

செவலூர்



சீர்வளர் செங்நெல் விளை செவலூரில்
பாரோர் பணிந்தேத்த பாங்குற பதிகொண்டாயே
ஓங்கார நாயகியே ஒற்றை மதுக்காரியே
பாங்காக பைந்தமிழால் பாடிப் பணிவோமே.

கருப்பர்

சதங்கை கட்டி ஆடி வாரான் சின்னக் கருப்பன்
சாட்டை சுழற்றி ஓடி வரான் பெரிய கருப்பன்
மீசை முறுக்கி எழுந்து வரான் சின்னக் கருப்பன்
மின்னும் வாளைச் சுழற்றி வரான் பெரிய கருப்பன்
கருப்பு ஆடை கட்டி வரான் சின்னக் கருப்பன்
கண்ணில் தீப்பொறி பறக்க வரான் பெரிய கருப்பன்
சல்லடத்தைக் கட்டி வரான் சின்னக் கருப்பன்
சஞ்சலத்தைப் போக்க வரான் பெரிய கருப்பன்
குதிரை மேலே ஏறி வரான் சின்ன கருப்பன்
கூட்டத்திலே புகுந்து வரான் பெரிய கருப்பன்
பெருகும் கண்ணீர் துடைத்திடுவான் சின்னக் கருப்பன்
வருந்துயரைத் தடுத்திடுவான் பெரியகருப்பன்
செல்லும் வழித் துணையாவான் சின்னக் கருப்பன்
கொல்லும் நோய்க்கும் மருந்தாவான் பெரிய கருப்பன்
நம்பிக்கைகுகந்த காவல்காரன் சின்னக் கருப்பன்
மதுக்கார நாச்சியின் ஊர்வலக் கட்டியங்காரன் பெரிய கருப்பன்


சங்கிலி நற்கருப்பன் நீ சார்ந்திட்ட பொருளும் நீ
சடாக்ஷர மந்திரமும் நீயே சகலரும் துதிக்கின்ற
தேவாதி தேவன் நீ சாம்பிராணி வாசகனும் நீயே
எங்கெங்கு அழைத்தாலும் ஏழையின் வாசலில்
எழுந்தோடி வருபவனும் நீயே இதயத்தில் இருப்போன்
இரக்கத்தில் கலப்போன் நீ இரவுபகல் காப்பவனும் நீயே
குங்குமம் சிறக்கவும் குடியெல்லாம் வாழவும்
குலம் காக்கும் என்தெய்வம் நீயே குன்றும் நீ குளமும் நீ
கோலாகலனும் நீ குன்றாவளப் பொருளும் நீயே
பங்காளிகூடிட படைப்புகள் கொண்டாடிட
பணியாரப் பிரியனும் நீயே பதினெட்டு படியாளும்
பக்தர்களின் காவலர் பாதையெல்லாம் துணைக்கு வாவா.

அருள்மிகு

பெரிய கருப்பர் - சின்னக் கருப்பர்

செவலூர்






அருள்மிகு மதுக்கார நாச்சியம்மன் உற்சவ விக்கிரகம் எழுந்தருளிய காட்சி
(2—9—90 இரவு)



திரு அ. முரு. நாகப்ப செட்டியார் அவர்கள் காரைக்குடி.




யாகசாலையின் அழகிய தோற்றம்



ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள முன் அலங்கார மண்டபத்தின் எழில் மிக்க தோற்றம்



செவலூர் அருள்மிகு மதுக்கார நாச்சியம்மன் ஆலயத்தில் புதுப்பிக்கப்பட்ட கோபுரம்



பிள்ளையார்பட்டி டாக்டர் திரு
K. பிச்சைக்குருக்கள் அவர்கள்



ஸ்தபதி திரு. S சண்முகம்
அவர்கள் காரைக்குடி

முருகன் துதி

நீல மயிலேறி வரும் பாலமுருகா — உந்தன்
காலில் சிலம்பொலிக்க ஆடுமுருகா — முருகா
காலமகள் தான்படைத்த கோலமுருகா — முருகா
ஞாலமது தினம் வணங்கித் தேடும்முருகா — முருகா
மாலவன் மருகனே இளமுருகா — மலை
நீலியவள் பெற்ற ஞானப் பழமுருகா — முருகா
பாலில் அபிஷேகம் கொள்ளும் தேவா — முருகா — எந்தன்
பலமெல்லாம் நீயே அன்றோ பழநிமுருகா — முருகா

அம்மன் துதி

காணுகின்ற பொருளிலெல்லாம் உன்காட்சியொன்றே தோணுதடி
கற்பகமே உன்உருவே இவ்வுலகம் ஆனதடி
தோணுகின்ற கற்பனையில் துவங்குதடி ஒருபாடல்
தொடுத்திருக்கும் வார்த்தைகளில் தோற்றுதடி உன்ஆடல்
உதித்துவரும் சூரியனும் உன்ஒளியில் மங்குமடி.
உயர்ந்து நிற்கும் மலைகளெலாம் உன்உள்ளம் கூறுமடி.
வெடித்துவந்த பூவிதழ்கள் பொலிமென்மை காட்டுதடி.
வேதங்கள் ஒலிதது உந்தன்பாத ஜதிகூறுமடி.
கடலலைகள் தாவிஉந்தன் கால்பணிய வருகுதடி.
காற்றும் புதுஇசைபாடி உன்போற்றி சொல்லிமகிழுதடி.
மடல்அவிழ் தாழைஉந்தன் மேனிமணம் ஆனதடி.
மயிலினம் நடக்கையிலே உன்நளினம் காட்டுதடி.
சலசலக்கும் நீரோடை உன்சங்கீதம் ஆனதடி
கலகலக்கும் உன்சிரிப்பே காதுகளில் கேட்குதடி.
ஆழ்ந்திருக்கும் கருமேகம் உன்கூந்தல் ஆகுமடி.
சுரந்துபெய்யும் வான்மழைபோல் உன்அருளும் பெருகுமடி.
கரம்கூப்பி வணங்கிநின்றால் எம்கஷ்டங்கள் தீருமடி.
கால்களே சரணமென்றால் காலகதி கிடைக்குமடி.
மாலையிட்டு வணங்கிவிட்டால் மாங்கல்யம் நிலைக்குமடி
மதுவி கண்பார்த்துவிட்டால் மனமகிழ்ச்சி கூடுமடி.

ஓம்சாந்தி; ஓம்சாந்தி; ஓம்சாந்தி.

பண்பாடு

தருமம் செழித்திருக்கும் செட்டிநாடு
தாய் மதுவரசியவள் தங்குமவீடு — இது
தஞ்சமென வந்தாரின் அருட்கூடு — அதைத்
தாரணி வாழ்த்துதலே இவ்வேடு
வாழுவோம் வாழவைப்போம் என்றெண்ணும் — இவள்
வரம் பெற்ற மாந்தர்களின் பண்பாடு
தாழ்விலும் நேர்மை ஏதும் தவறாத—பெருந்
தகையோரை ஈன்றதிந்தத் திருநாடு

கும்மிப் பாட்டு

மதுக்கார நாச்சியவள் நாமம் சொல்லி—இள
மங்கையரே கும்மி கொட்டுங்கடி.
மருதாணிச் சிவப்புக் கைகளினால்—இந்த
மாதேவி இதயத்தைத் தட்டுங்கடி.
செவலூரின் புதுச் சித்திரமாம் — இவள்
செட்டி நாட்டார் போற்றும் ரத்தினமாம்
கொவ்வைப் பழஇதழ்க் கொஞ்சலிலே—மனம்
கொள்ளையடித்திடும் நித்திலமாம்
அழகுக் கிவளே இலக்கணமாம்—நம்
ஆனந்தம் தான் இவள் லட்சியமாம்
பழகு தமிழ் செய்த பாக்கியமாம்—இவள்
பாடத் தந்த இந்தவாக்கியமாம்
நான்மறை போற்றிடும் நாயகியைக் காண
நாநிலமே அலைமோதுதடி — இவள்
கூன்பிறை நெற்றியில் குவிந்த மனமெல்லாம்
கொற்றவையாள் புகழ் ஓததடி
காலில் கலீரிடும் சிலம்பொலிக்கே — இந்த
ககனமெல்லாம் சுழன்றாடுதடி
வேலின் விழிகொண்ட கருணையிலே—எங்கள்
வேதனை யாவுமே தீருதடி
கோதையிவள் முகம் காணுதற்கே — ஒன்றாய்க்
கூடிநின்றோம் இவள் கோயிலிலே — மனம்
கொள்ளா இவள் அன்பைச் சொல்லிச்சொல்லிக் — கைகள்
கொட்டி மகிழ்வோம் வாயிலிலே.

கல்யாணம்

அம்பிகையின் கல்யாணம் காணவாருங்கள்---இந்த
ஆனந்தத்தில் பங்குகொள்ள ஓடி வாருங்கள்
இருவாட்சி ரோஜா மல்லி கொண்டு வாருங்கள்
ஈஸ்வரிக்கு அலங்காரம் செய்து மகிழுங்கள்
உச்சி முதல் பாதம் வரை உற்றுப் பாருங்கள்
ஊஞ்சலிலே அமர வைத்துப் பாட்டுப் பாடுங்கள்
எங்கும் ஒலி வாத்தியத்தின் முழக்கம் கேளுங்கள்
ஏற்றபடி தாளமிட்டு ஆடி வாருங்கள்
ஐங்கரனும் இங்கே முன்னால் வந்தார் பாருங்கள்
ஐயனும் அம்மையும் ஒன்றாய் அமர்ந்தார் பாருங்கள்
ஒப்பனை செய்த பந்தலின் நுட்பம் பாருங்கள்
ஓதும் நான்கு வேத ஒலி இங்கே கேளுங்கள்
அக்கினி பகவான் இங்கே வந்தான் பாருங்கள்
ஆகமமாய் யாகம் செய்யும் பிரம்மன் பாருங்கள்
இந்திராதி தேவர்களின் கூட்டம் பாருங்கள்
ஈரேழு லோக மாந்தர் வந்தார் பாருங்கள்
சாமரத்தை வீசி வரும் வாயு பாருங்கள்
சந்தோஷப் பூமழை தூவும் வருணன் பாருங்கள்
நாரதரின் வீணை இசை நயம் கேளுங்கள்
நாமகளும் பூமகளும் பக்கல் பாருங்கள்
நாராயணன் சந்தோஷமாய் வந்தார் பாருங்கள்
நங்கையவள் கைபிடித்துத் தந்தார் பாருங்கள்
பூக்கள் மழையாய்ப் பொழியும் காட்சி காணுங்கள்
பூலோக சொர்க்கமிதே என்று ஆடுங்கள்
அம்மை அப்பன் ஆகிநிற்கும் கோலம் காணுங்கள்
அவர் மகிழ்ந்த நேரத்திலே ஆசி கேளுங்கள்
அமிர்தமாம் உணவு வகை அருந்தி மகிழுங்கள்
ஆனந்தமோ கொள்ளை கொள்ளை என்று ஆடுங்கள்

ஊஞ்சல் பாட்டு

செவலூரில் கண்டேன் ஒரு சொக்கத் தங்க ஊஞ்சல்
செகத்தை ஆள வந்த அரிய மகத்துவ ஊஞ்சல்
சொர்க்க லோகம் எனவே மனதைச் சொக்கவைக்கும் ஊஞ்சல்
சொர்ணச் சிலையாளம் மதுக்கார நாச்சியவள் ஊஞ்சல்
புற்றினுள் பாம்பெனவே மனதுள் புகுந்துவிடும் ஊஞ்சல்
சற்று சிந்தித்தவர்க்கு உடனே சாந்திதரும் ஊஞ்சல்
கற்றுத் தெளிந்த நெஞ்சம் தனிலே கலந்துவிடும் ஊஞ்சல்
சுற்றி வலம் வருவோர் கைகளைப் பற்றிக் கொஞ்சும் ஊஞ்சல்
முத்து ரத்தினமிழைத்த இந்த மோஹனப் பொன்னூஞ்சல்
அத்தன் அருகமர்ந்து தேவியள் ஆடினாள் கன்னூஞ்சல்
நித்தம் தொழுபவர்க்குத் தனையே சொத்தாய்த் தரும் ஊஞ்சல்
நிலனிலிம் வாழ்பவரை நிழலாய்க் காத்திடும் இவ்வூஞ்சல்
அன்னையிவள் ஆடிவரும் அழகுமய ஊஞ்சல்
அகிலமது சுழலஇவள் ஆடுகிறாள் ஊஞ்ச்ல்
ஆனந்த சாகரத்தில் ஆடும் இந்த ஊஞ்சல்
ஆற்றலொடு அன்பு தந்து ஆட்டுவிக்கும் ஊஞ்சல்
'வானமொடு வையம் வரை ஆடுகின்ற ஊஞ்சல்
வைரமணி வைத்திழைத்த வடிவழகி ஊஞ்சல்
ஞானியரின் நெஞ்சமதைத் தேடி வரும் ஊஞ்சல்
நான்முகனும் ஹரிஹரனும் நாடி வரும் ஊஞ்சல்
நால்வேதம் சங்கிலியாய்ப் பூட்டிய திவ்வூஞ்சல்
நம்பிக்கையே உத்திரமாய் கொண்டதிந்த ஊஞ்சல்
நந்தவனமா மணம் வீசி வரும் ஊஞ்சல்
நாயகியாள் ஆடிவரும் நம் மனமே ஊஞ்சல்

அபயம் ஓ, மதுவம்மா அவசரமாய் வந்திடடி
அழுத என் கண் துடைத்து ஆதரவு தந்திட்டி
மாய உலகமடி மாய்மால முகங்களடி—அதன்
மாளாத கொடுமையிலே யான் மனம் நொந்த பிள்ளையடி
வரவு செலவெழுதி வாடித் துவண்டு விட்டேன்
வாழ்வெது தாழ்வெதென்றே வடிவத்தைக் கண்டுவிட்டேன்
உறவெல்லாம் நடிக்குதடி என் உள்ளம் துடிதுடிக்குதடி
துறவென்று கொண்டாலும் உன் துணை யெனக்கு வேண்டுமடி

ஓம் சாந்தி, ஓம் சாந்தி, ஓம் சாந்தி

வாழ்த்துப்பா

சீர்வளர் செந்நெல் விளை சேவலூரில்
பாரோர் பணிந்தேத்த பாங்குற பதிகொண்டாயே
ஓங்கார நாயகியே ஒற்றை மதுக்காரியே
பாங்காக பைந்தமிழால் பாடிப் பணிவோமே!
கொற்றவளே எங்கள்குல குலமகளே கோமேதகமே
நற்றமிழில் பாடியுனை நாளும் துதிப்போமே
அற்றம் நீக்கி அன்பால் அரவணைத்து
பெற்ற நாயகி பெருவாழ்வு தருவாயே

வடக்கு முகமமர்ந்து வல்வினை அகல
எமக்கு துணையாக எப்போதும் இருப்பவளே
வண்டாடும் சோலை நின்றாடும் சேவலூரில்
கொண்டாடி மகிழ்ந்தோம் வண்டார் குழலியை
அம்மையே குறையாத அருளமுதே எம்மை
இன்மையும் மறுமையும் இனிதேமனித குலம்ஈடேற
செம்மையாய் பூசித்தோம் சேவலூர் மக்களெல்லாம்
மும்மையும் நலம்பெற அம்மையே அருளுகவே

ஓங்குபுகழ் மதுவிக்கு தேங்கும் சிறப்போடு
பாங்குற திருப்பணி பார்புகழ செய்து
தங்கும் செல்வம் தரணியில் பெற்று
இங்குயாவரும் சிறக்கவே பொங்குமருள் தருகவே
மண் செழிக்கும் மகிமைசேர் சேவலூரில்
மங்கல வல்லி மதுக்கார நாச்சிக்கு
மங்கள குடமுழுக்கு மகிழ்வோடு நீராட்டும்
நன்கலம் நன்மக்கள் நலமுடன் வாழியவே

வாழ்த்துப்பா

புதுக்கோட்டை மாவட்டம் புண்ணியத் திருநகர்
செவலூரில் எழுந்தருளியுள்ள மதுக்காரநாச்சிஅம்மன் திருக்கோயில்
திருக்குடமுழுக்கு விழாவின்போழ்து அன்னையின் அருளை நினைந்து
பாடியது.

புக்கோட்டைச் சீமைபுகழ் புண்ணியத்தின் நிறைவிடமே!
மதுக்கார நாச்சியம்மா மனமிசைந்த உறைவிடமே!
செவலூரே! சீர்பதியே! சேமங்களின் பெட்டகமே!
புவனமதைக் காத்திடவே பூத்திருக்கும் சாட்சியமே!
மங்களமே! நாயகியே! மதுக்கார நாச்சியம்மா!
திங்கள்நேர் முகத்தழகி! தேவியவள் செல்வியன்றோ!
எங்கள்குல தேவியவள் ஏறெடுத்துப் பார்த்திடவே
பங்கயத்தை மலரடியை பணிந்துநாம் வணங்கிடுவோம்
கன்னியவள்! தெய்வமவள்! காண்போர்க்கு கருணை நிறை
அன்னையவள்! தெய்வக்கனல்! ஆதிபராசக்தியவள்!
கண்கண்ட தெய்வமாக கைதொழுதார் வாழ்வுபெற்றார்!
திக்கறியாக் காட்டினிலே திசைகாட்டும் தீச்சுடரே!
பக்கதுணையே! தாயே! பாதச்சலங்கை ஒலியே!
வறுமை வந்துற்றபோதும், வாழ்க்கையில் நொந்தபோதும்
பெருமையுள நின்கருணை பேசிடவே முடியாது!
நின்கருணை நினைத்துருகி நித்தமுனைத் துதிப்போருக்கு
பொன்னென்ன? பொருளென்ன? போகத்துடன், அறவழியின்
நல்லறிவும் வழங்கிடுவாய்! நாயகியே! நாச்சியம்மா!
சொல்லெடுத்துப் பாடுகின்றோம் சுடர்க்கொடியே! அருள்தருவாய்!
மழலைகளைத் தந்தவளே! மகப்பேறு அளித்தவளே!
கழல்போற்ற மறவாது கடைக்கணித்த பெயராலே
பிள்ளைகளை செல்வங்களை பெருமையுடன் அழைக்கின்றோம்!
கொள்ளையென இன்பமதைக் கொடுத்திட்டாய்! கொற்றவையே!
ஞானக்கொழுந்தே எங்கள் நாச்சியம்மனே! குறைதீர்க்கும்
நவாசநாயகி! அம்மா! நாங்கள் நீபெற்ற பிள்ளைகள்
பால் நினைந்தூட்டும்தாயே! பரிபாலிக்க வேண்டுமம்மா!
ஆல்போல் வளர்ந்திடஆசை அதுவுமுன்புகழ் பாடிடவே!
குமரி உன்னைப்பெற்றோம் கோடிபெற்றோம் நாங்கள்!
அமரர் உலகுங்கூட அப்புறம்தான் எங்களுக்கு!
கோதிலா வாழ்வுதருவாய்! குடிப்பெருமை உயர்ந்திடவே!
நாத வடிவானவளே! நாச்சியம்மாவே! துணையே!

அருள் நினைந்தவர் :-

புலவர். சி. நடகாசன்
கோட்டூர் – மலையாண்டிபட்டணம்
642114

திரு V.N. அண்ணாமலைச் செட்டியார்.
திரு. A. ஆசீர்வாத கண்ணன்
பூலாங்குறிச்சி

உ

வாழ்த்துப்பா

செவலூர் மதுக்கார நாச்சியம்மன் கோவில் கும்பாபிசேக தினத்தன்று அதிகாலை 4மணிக்கு அம்மன் சன்னதியில் அமர்ந்து எழுதிய பாடல்.

கோலவிழி அம்மன் வாழஅருள் புரிவாள்
ஞாலமது உய்ய நாயகியும் வருவாள்
காலமெலாம் அவளின் கால்கள்பற்றி நின்ருல்
நாலுவகைத் துன்பம் நாழிகையில் போகும்
நாச்சியம்மன் தாயை நாடியவர்க ளின்று
நல்லதொரு கும்பா அபிஷேகஞ் செய்தார்;
ஆச்சியர்கள் பாட்டில் ஆட்சிசெயும் அம்மாள்
அண்டியவர் வாழ்வில் அள்ளியெலாங் கொடுப்பாள்
கண்டுகொண்ட உண்மை கவிதையிலே சொல்ல
கண்ணதாச னில்லை கடையனிவன் வந்தேன்
விண்டுரைக்க வார்த்தை வேண்டுமடி தாயே!
விரைவிலெந்தன் நாவில் வந்துகுடி யேறு!
அக்னியாத்தா படைப்பின் அன்பரெலாஞ் சேர்ந்து
நற்கனியயே பெற்ற நாயகனைப் போல
பொற்கனியாந் தாயின் பொற்கோயிலமைக்க எண்ணி
பொற்பதந்தான் பணிந்து புதினமதைச் செய்தார்;
பெரியகருப்ப ரோடு சின்னக்கருப்பர் சேர்ந்து
பேறுபெற்ற கதையை நேரில்வந்து காண்பீர்;
கையிரண்டு ஒன்று சேர்ந்தால்சத்தம் வருமே
காரியங்கள் யாவுங் கண்டவுண்மை யதுவே!
நாட்டாரவ ரோடு நகரத்தார் சேர்ந்து
நாட்டிவைத்த இந்த நல்லதொரு செயலை
கேட்டவர்கள் சொல்வார் கேடுநினைக்க வந்த
கூட்டமதை அந்தக் கோதையவள் கூட்டி
நாடியதை நல்ல வழியினிலே நாட்டி
கேடுஅதைப் போக்கி கேண்மையுறச் செய்து
கொல்லிமலை சென்ற கருப்பர்திரும்பி வந்து
கூடஇருந்து இந்தக் குடமுழுக்கு செய்து
நல்லதொரு செயலும் நடத்தியதைக் கண்டு
நாச்சியம்மன் பாதம் பணிந்துஒன்று சொல்வேன்;
நம்பியவர் வாழ்வில் நாச்சியம்மன் நிற்பாள்;
நம்பி,அவர் நாவில் நாளும்குடி இருப்பாள்.

அன்பன்.

இல. சேவுகன் செட்டி

சண்முகநாதபுரம்

நகரத்தார் சாதிமுறை நியாயங்கள்

1 அன்னை, தந்தை, குரு, தெய்வம், பிராமணர், குலதேவதை இவர்களை வணங்குதல்

2 கோவில்களுக்கும், குருதானங்களுக்கும், உள்ள சொத்தைக் காத்து அதில்வரும் ஊதியத்தை அதே தர்மங்களுக்குப் பயன்படுத்துதல்.

3 ஆண்கள் பாதரக்குடி மடத்திலும், பெண்கள் துளாவூர் மடத்திலும் உபதேசம் கேட்டுக் கொள்ளுதல்.

4 சிவ மதத்திலேயே இருத்தல்.

5 தத்தம் கோவில் மாலை பெற்றே திருமணம் செய்தல்.

6 ஒரே கோவில் பிரிவில் திருமணம் செய்து கொள்ளாமை.

7 தத்தம் கோவில் பிரிவில் சுவீகாரம் செய்து கொள்ளுதல்.

8 இரணியூரார், பிள்ளையார் பட்டியார் இவர்கள் உடன்பிறப்பினர் ஆதலின் தம்முள் திருமணம் செய்யாதிருத்தல்.

9 சிவவதை வியாபாரம், குதிரை வியாபாரம், வெற்றிலை போன்ற அழுகல் பொருள் வியாபாரம் செய்யாதிருத்தல்.

10 பணம் கொடுக்கல் வாங்கலில் தர்மவட்டி வாங்குதல்.

11 திருட்டு வியாபாரம் செய்வதில்லை. பிறன் மனைவியைச் சேர்வதில்லை தாசிகளிடம் கொடுக்கல் வாங்கல் செய்வதில்லை.

12 நகரமுறை தவறியவர்களையும், அரச தண்டனை பெற்றவர்களையும் சோரம் செய்தவர்களையும் சேர்வதில்லை.

13 செட்டி நாட்டிலேயே குடியிருப்பது. விஷேடங்கள் செய்வது.

14 பெண்கள் தீர்த்த யாத்திரைகளுக்குப் புருடர்களுடன் போய்வர வேண்டும்

15 எந்த விடயத்திலும் முன் வழக்கப்படி நடந்து கொள்வது.

16 நகரக் கூட்டம் கோவில் வாசல் அல்லது மடத்தில் நடத்துவது.

கோவிலுக்குப் போக வேண்டுமா?

ஆசிரியர் : S. மீனாட்சிசுந்தர முதலியார் B.A; L.T; ஈரோடு

குன்றக்குடி நல்லதம்பி பதிப்பகத்தாரால் பதிப்பிக்கப்பட்டது

அறிவிற் சிறந்த ஔவையார் 'ஆலயந் தொழுவது சாலவும் நன்று என்று அருளிச் செய்தது எக் காரணம் பற்றி? அதனைச் சிறிது அறிதல் வேண்டும். கோவில் என்ற சொல்லுக்கு இறைவன் இருப்பிடம் என்பது பொருள். ஆலயம் என்பதற்கு கடவுளின் திருவடிகளில் உயிர்கள் பொருந்தி இருப்பதற்கு ஏற்ற இடம் என்பது பொருள். ஊர்கள் தோறும் கோவில்கள் வேண்டும். கோவில்கள் இல்லாத ஊர் சிறப்பில்லாத ஊர் 'கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது நமது பண்டைப் பழமொழி. எங்கும் நிறைந்து விளங்கும் கடவுளுக்கு கோவில் எதற்கு? என்று சிலர் கேட்கின்றனர்.

வானொலி நிலையத்திலிருந்து பாடும் போது வெளிவரும் மின்சாரக் காந்த அலைகள் ஒரு விநாடிக்கு 1,86,000 மைல் வேகத்தில் வானில் பரந்து பாய்ந்தாலும், ஒலி வாங்கியின் உதவியின்றி அப்பாடலை நாம் அறிந்து கொள்ளவோ, அனுபவிக்கவோ முடிகின்றதா? பூமிக்கடியில் நீர் எங்கும் வியாபித்திருந்தாலும், கிணறு தோண்டித்தானே அதை நாம் வெளியே கொண்டு வந்து பயன்படுத்துகிறோம். மின்சாரம், ஆகாயம் முழுவதும் வியாபித்திருந்த போதிலும் அதனை ஒரு மின்சார நிலையத்தின் மூலமாகத் தானே மக்களுக்குப் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. பசுவின் உடல் முழுவதிலும் பால் சத்து, வியாபித்து இருந்தாலும் அதன் மடியின் வழியாகத் தானே அப்பசு பால் சுறக்கின்றது அது போலத்தான் கடவுள் அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாக இருந்தபோதிலும் கோவிலில் தான் சிறப்பாக வெளிப்பட்டு நின்று மக்களுக்கு அருள்புரிகின்றார். ஆதலினாலேதான் 'ஆலயந் தொழுவது சாலவும் நன்று' என்று ஔவைப் பிராட்டியார் அருளிச் செய்துள்ளார்.

வீட்டில் சமைக்கவும், குளிக்கவும் சாப்பிடவும், தூங்கவும் தனித்தனி அறைகள் இருப்பன போலவும், நகரத்தில் சாமான்கள் வாங்கவும் நாடகம் சினிமாக்கள் பார்க்கவும், வழக்காடவும், தனித்தனி இடங்கள் அமைந் திருப்பன போலவும், இறைவன் மக்கள் வழிபடக் கோவில்கள் இன்றியமை யாதவைகளாய் இருக்கின்றன. அந்த அந்த இடங்களுக்குப் போகும் போது நமது மனமும், செயலும் அந்த அந்த வேலையில் ஈடுபடுகின்றன. கோவிலைத் தவிர உள்ள மற்ற இடங்கள் எல்லாம் மனம் ஒருமைப்பட்டு இறைவனை வழி படுவதற்கு ஏற்ற இடமாக இருப்பதில்லை. 'உலகப் பற்றினின்றும், கவலை யினின்றும், நீங்கிச் சிறிது நேரமாவது நாம் பரம் பொருளினிடம் மனதைச் செலுத்துமிடம் கோவிலேயின்றி வேறுயாதுளது?

வீட்டிலே கடவுள் வழிபாட்டிற்குத் தனி இடமும், தனி நேரமும் ஒதுக்கி வைக்க எல்லோராலும் முடியுமா?

''மனம், வாக்கு, காயங்களுக்கு எட்டாத இறைவனை இம் மூன்றின் துணை கொண்டே அடைய வேண்டும். எனவே தான் இறைவன் ஆலயத்துள் நம் பொருட்டு எழுந்தருளியுள்ளான்.

பூகோளம் கற்பவர்க்குத் தேசப்படம் எவ்வளவு இன்றியமையாததோ, அன்பர்களுக்கு ஆலய வழிபாடு அவ்வளவு இன்றியமையாதது. ஊர்களும், ஆறுகளும், மலைகளும், எங்கெங்கே எப்படியமைந்திருக்கின்றன என்று தேசப்படத்தின் துணை கொண்டு தெரிந்து கொள்கிறோம். பின்பு நாம் அவ்விடங்களுக்குச் சென்று நேரில் பார்க்கும் போது அவைகளை உள்ளபடி காண்கிறோம். நட்சத்திர மண்டலங்களைப் படங்கள் காட்டுகின்றன. ஆனால் அகண்டாகரத்தில் விரிந்தோடும் நட்சத்திர மண்டலங்களுக்குப் போகவும் முடியாது. ஆலய வழிபாட்டைப் பற்றிய உண்மையும் அப்படித் தான். நம் சிற்றறிவைக் கொண்டு கடவுளை ஒரு சிறிது அறிந்து கொள்ளலாம். ஆனால் தெரியாத பகுதியோ எல்லையில் அடங்காதது. பரமனை எண்ண, எண்ண, அறிய அறிய மனது அகண்டாகாரத்தில் விரிந்தோடி பரத்தின் பால் கலந்துவிடும் தேசத்தின் படமும், வானத்தின் படமும் நம் பொருட்டு அமைக்கப் பெற்றவை. 'ஆலயத்தினுள் மூர்த்தியாகத் தெய்வம் எழுந்தருளியிருப்பதும் நம் பொருட்டே'.

சைவ சமயத்திற்குப் புத்துயிர் கொடுத்த திருஞான சம்பந்தர், திரு. நாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், ஆகிய நான்கு மகான்களும் இறைவனைக் கண்ணாரக் கண்டவர்கள். இறைவன் திருவருள் கைவரப் பெற்றவர்கள். இறைவனது அருள் ஒளியில் கலந்தவர்கள் அவர்கள் இறைவனை அல்லும், பகலும் தம் உள்ளக் கோவிலில் வைத்து, வழிபட்டு வந்தவர்களென்பதை அவர்கள் அருளிய அருள் வாக்குகளே, நமக்கு நன்றாகக் காட்டுகின்றன. இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் என்கின்றார் மணிவாசகப் பெருந்தகை. 'நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன் நினையாதொருபோது மிருந்தறியேன் என்று பாடுகின்றார் நாவுக்கரசர் 'எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்து உன்னை என்று அருளுகின்றார் சுந்தரர். உள்ளம் கவர் கள்வன் என்கின்றார் திருஞான சம்பந்தர்.

இறைவனை அகத்தும் புறத்தும் கண்ட இவர்கள், தங்கள் மண்ணுலக வாழ்வை எல்லாம் திருத்தலங்களுக்குச் சென்று, கோவில்களில் இறைவனை வழிபட்டுப் பாடுவதிலேயே கழித்தனர் என்பது பொய்யா? சிவனடியார் திருக் கூட்டத்தோடு தமிழ்நாடு முழுவதும் நடந்து சென்று, தமிழகத்தைச் சிவ லோகம் ஆக்கியது ஆலய வழிபாட்டின் வாயிலாகத் தானே. திருக்கோவில் களிலே இறைவன் திருமுன்பிலே நின்று அருளிச் செய்த பாடல்கள் தாமே தேவார திருவாசகங்கள். சிவசோதியிலே கலக்கும் பெரும் பேறு பெற்ற நால்வர் பெருமக்களே கோவில் வழிபாட்டின் பெருமையை உணர்ந்து நமக்கு வழி காட்டியிருக்கும் போது நாம் அவர்கள் சென்ற வழியிற செல்வதே நமக்கு

'அறிவுடைமையாகும்'. இது பற்றியே 'நாலு பேர் நடந்த வழி நட' என்ற பழமொழியும் எழுந்தது.

'சார்ந்தகன் வண்ணமாகும் உயிர்' என்பது அன்றும் இன்றும் யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை. சதாகாலமும், சீட்டாடுவோர் அதே பைத்தியமாக இருப்பதையும், சினிமாப் பித்தர்கள், வரிசையில் மணிக்கணக்காக நிற்பதையும், நடை, உடை, பேச்சு, சிரிப்பு, முதலிய வற்றில் சினிமா நட்சத்திரங்களைப் பின் பற்றுவதையும் தாழ்ந்த குணத்தின ரோடு பழகுவோரும், தகாத நூல்களைப் படிப்போரும் பாழாவதையும் நாம் எங்கும் பார்க்கின்றோம். அவ்வாறே தூய உள்ளத்தோடு கோவிலுக்குச் சென்று இறைவனை வழிபடுவோர் அன்பும், அருளும் நிறைந்து விளங்குவர். என்பதில் ஐயமுண்டோ?

ஒவ்வொரு எண்ணத்திற்கும் நிறமுண்டு, வடிவமுண்டு பேராற்றலுண்டு என்று இன்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அகக்கண் காட்சியுடையோர் இது குறித்து எழுதிவைத்துள்ள நூல்களில் (Thought forms by C. W. Leadbeator) பக்திக்கு நீல நிறமும், அறிவுக்கு மஞ்சள் நிறமும், அன்புக்கு ரோஸ் நிறமும், கோபத்திற்கு இரத்த சிவப்பும், வெறுப்புக்கும் பொறாமைக்கும் கருமை நிறமும் நுண்ணுடம்பிலிருந்து வெளிப்படுவதாகக் கூறுகின்றனர்.

''தீயாரைக் காண்பதும் தீதே திருவற்ற
தீயார் சொற் கேட்பதுவந் தீதே''

''நல்லோரைக் காண்பதுவும் நன்றே, நலமிக்க
நல்லோர் சொற் கேட்பதுவும் நன்றே''

என்பன நன்கு சிந்திக்கத்தக்க அறிவுரைகள். ஆலய வழிபாட்டிற்கு வரும் அடியார்களின் தூய எண்ண அலைகள் நம் நுண்ணுடம்புகளைத் தொட்டு, அவைகளைத் தூய்மையாக்கும். மகான்களின் மன உடம்பு பல மைல் தூரம் வியாபகம் உடையதாக இருக்கும் என அகக் கண் திறக்கப்பட்டோர் கூறுகின்றனர் மணிவாசகர் ''அடியார் நடுவுள் நானிருக்கும் அருளைப் புரியாய்'' என்று இறைவனை வேண்டுகின்றார் 'தொண்டரோடு கூட்டு கண்டாய் என்று தாயுமானவர் பாடுகின்றார் நம்நாட்டில் வெளியே கூடும் கூட்டம் எல்லாம் தெருக்கூட்டமாகவும், திருக்கோவிலில் கூடும் கூட்டமே திருக்கூட்டமாகவும் கருதப்பட்டு வருகின்றது.

பூமியின் ஈர்ப்புச் சக்தி (Gravity)யைக் காட்டிலும் அதிக சக்தி வாய்ந்தது. மனத்தின் ஆற்றல் என்பதை ஜெ.பி. ரைன் (Reaches of mind by J.B Rhyn) என்பவர் 'மன ஆற்றலின் எல்லை' என்ற நூலில் காட்டியுள்ளார். ஜட சக்திகளை விட மனோசக்தி அதிக வலிமையுடையது என்பதை ட்யூக் பல்கலைக் கழகத்தில் (Duke University) ஆராய்ச்சியின் மூலம் நிருபித் துள்ளார்கள். எனவே நம் மனம் தூய்மைப்பட வேண்டுமானால் அதனைத் தூய்மை மனமுடையோர் கூடும் கோவிலின்றி வேறு எங்கு பெற முடியும்.

மண வீட்டின் மங்கல ஒலி மனத்தில், மகிழ்ச்சியையும், இழவு வீட்டின் அழுகையொலி சோகத்தையும் ஊட்டுவது நமது அனுபவம். ஒரு சினிமாக் கொட்டகையில் புறத்தூய்மையையோ அகத்தூய்மையையோ, எதிர்பார்க்க முடியாது. புகை பிடிக்கும் நாற்றமும் நூற்றுக்கணக்கான பேர் விடும் நச்சு மூச்சும் உடலைக் கெடுக்க காமக் காட்சிகளும், இழிந்த பாடல்களும் உள்ளத்தைக் கெடுக்கின்றன. கோவிலிலோ அன்பர்கள் இறைவனை வாழ்த்தும் வாழ்த்தொலியும் கற்பூரம், ஊதுபத்தி நறுமலர் ஆகிய இவை களின் நறுமணமும் மூர்த்திகளின் திருவுருவப் பொலிவும் நம்மைப் பரவசப் படுத்துகின்றன. திரிகரண சுத்தமும் ஏற்படுகின்றது.

டாக்டர் ப்ருன்லர் (Dr. Brunler) என்ற பிரஞ்சு தேசத்து விஞ்ஞானி ஆல்ப்ஸ் மலையிலிருந்தும், இமயத்திலிருந்தும் ஒரே தன்மையை உடைய இரண்டு கற்களைத் தனது பயாமீட்டர் (Biometer) என்ற கருவியில் வைத்துச் சோதித்துப் பார்த்து இமயத்தின் கல்ஆல்ப்ஸின் கல்லைவிட 300 மடங்கு அதிகச் சக்தி வாய்ந்தது எனக் கண்டார். ஒவ்வொரு பொருளும் தனக்கு இயற்கையாய் உள்ள அலைகளை (Radiation) தன்னைச் சுற்றி ஓயாது பரப்பிக் கொண்டேயிக்கும் எனவே இமயத்திலிருந்து பாய்ந்து வரும் அலைகள் இந்தியா முழுவதிலும் வியாபிக்கின்றது என்று கூறுகிறார். பார்வைக்கும் புற ஆராய்ச்சிக்கும் ஒரே மாதிரியுள்ள இரண்டு கற்கள் அகச் சக்தியிலே 300 மடங்கு வித்தியாச முடையனவாக இருப்பதை 1918-ல் இந்தியாவுக்கு வந்த டாக்டர் ப்ருன்லர் தம் கருவியின் மூலம் காட்டினாரெனில் ஆகம விதிப்படி திருக்கோயில்களில் எழுந்தருளப் பண்ணியுள்ள மூர்த்தங்கள் சிலர் எண்ணுவது போல வெறும் கற்களல்ல, அவை பெரிய மின்சார டைனமோக்கள் யந்திர ஸ்தாபனமும், பிராணப் பிரதிஷ்டையும், செய்யப் பட்டுள்ள மூர்த்தங்கள், தங்கள் அனுக்கிரக சக்தியை இடைவிடாமல் பரப்பிக் கொண்டேயிருக்கின்றன. அவை வேண்டுவோர் வேண்டியவற்றை வேண்டியபடியே ஈயவல்ல ஆற்றல் வாய்ந்தவை.

ஆலயங்களில் நடைபெறும் பூஜைகள் இந்த பேட்டரிகளினின்றும் (திருவுருவங்கள்) வழிந்தோடும் ஆற்றலை ஈடுகட்டுகின்றன. எனவே மாசு மறுவற்ற சிந்தையோடும், அருள் வேட்கையோடும் திருக் கோவில்களுக்கு சென்று வருவோர் இம்மை, மறுமைப் பேறுகளை எளிதில் பெறலாம் என்பதில் சிறிதும் சந்தேகம் கொள்ள வேண்டியதில்லை. கோவிலில் ஈஸ்வர நாம சங்கீர்த்தனம் நடைபெறும் போது அற்புதமான வர்ணங்களோடு பற்பல வடிவங்கள் உண்டாகின்றன. இவைகள் அங்கு கூடியுள்ள அன்பர்களின் சூட்சும உடல்களைத் தூய்மைப் படுத்துகின்றன. மனதிற்குச் சாந்தியையும் அளிக்கின்றன.

ஆலயங்கள் அருள் நிலையங்களாக இருப்பதோடு கூடக் கலைக்கூடங்க ளாகவும் காட்சியளிக்கின்றன. மதுரை, இராமேஸ்வரம், காஞ்சி, தஞ்சை சுசீந்தரம் முதலிய ஸ்தலங்களில் உள்ள கோவில்கள் கலைக் கருவூலங்கள் அங்குள்ள சிற்பக் கலைக்கு ஈடு உலகில் வேறு எங்கேனும் உண்டா? வான ளாவிய கோபுரங்களின் வனப்புத்தான் என்னே! நடராஜ மூர்த்தத்தைச் சிருஷ்டித்த பெருமை தமிழனுக்கல்லவா உண்டு?

ஓவியமும், காவியமும், நாடகமும். நாட்டியமும். இசையும், சிற்பமும். வளர்ந்ததும் நம்முடைய கோவில்களில் அல்லவா? நம் நாட்டைக் காண வரும் அயல்நாட்டு அறிஞர்கள் நம் கோவில்களைக் கண்டு மெய்மறந்து நிற்கின்றனர். எத்தனை அரசர்கள், எத்தனை கலைஞர்கள், எத்தனை அன்பர்கள். எத்தனை ஆண்டுகள் கோவிலில் திருப்பணியில் ஈடுபட்டிருந்திருப்பார்கள்! சிந்தித்துப் பாருங்கள். முவேந்தர்களின் அரண்மனைகள் மண்ணோடு மண்ணாய்ப் போயின. ஆனால் அவர்கள் எடுத்த திருக்கோவில்கள் நம் நாட்டை அலங்கரிப்பதோடு சிறந்த அருள் நிலயங்களாகவும் விளங்குகின்றன. எகிப்து, ரோம், கிரீஸ், பாபிலோன் முதலிய பழம்பெருமை படைத்த நாட்டின் கோவில்கள் இன்று பாழாகிவிட்டன. அங்கு வழிபாடு நடப்பதில்லை. அக்காலத்திய மக்கள் வழிபட்ட உருவங்கள் இன்று கண்காட்சி சாலையில் வைக்கப்பட்டு விட்டன. ஆனால் நம் நாட்டில் கோவில்கள் இறைவன் உறைவிடமாகவும் மனம் இறைவனிடத்தில் லயிக்கும் இடமாகவும், பக்தியோடு வழிபாடு செலுத்தும் அருள் நிலையங்களாகவும் இருப்பதை எண்ணியெண்ணி இறும்பூதெய்த வேண்டும். கோவில்களைக் கட்ட நம்மால் முடியாவிடினும், நம் முன்னோர்கள் கட்டி நமக்குக் கொடுத்துள்ள கோவில்களை பராமரிக்கவாவது வேண்டாமா? திருக்கோவிலுக்குச் செல்லுவோர் கோவிலை இறைவன் இருப்பிடமாகவும் அங்குள்ள திருவுருவங்களை இறைவனின் அருளுருவ அடையாளங்களாகவும் நினைந்து வழிபட வேண்டும்.

திருக்கோவில் உள்ளிருக்கும்
திருமேனி தன்னைச்
சிவனெனவே கண்டவர்க்குச்
சிவன் உறைவன் அங்கே.

திருக்கோவில்களும், ஆங்குள்ள திருவுருவங்களும், நமக்கு இறை உணர்ச்சியை வளர்ப்பதற்காக நமது முன்னோர்கள் அன்போடு செய்து வைத்த அரும்பெருஞ் செயல்களின் அருள் தோற்றங்களாக விளங்குபவைகளே.

குறிகளும் அடையாளமும் கோயிலும்
நெறிகளும் அவர்நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதிலும்
பொறியிலீர் மனம்என்கொல் புகாததே.

என்ற திருநாவுக்கரசர் தேவாரம் கோவில் வழிபாடு மிகவும் அவசியம் என்பதை நமக்கு நன்கு விளக்குகின்றது.

நமது முன்னோர் கோவிலினுள் உள்ள திருவுருவத்தை ஏதோ கற்சிலையென எண்ணவில்லை, ஆங்கு கடவுளையே கண்டார்கள். அவரோடு பேசினார்கள் 'ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே' என்றும் 'சிந்தையே கோவிலாகக் கொண்ட எம்பெருமான் திருப்பெருந்துறையுறை சிவனே யென்றும்' விண்ணாகி, மண்ணாகி, இத்தனையும் வேறாகிக் கண்ணாரமுதமாய் நின்றான்! என்றும் இறைவனது உண்மைத் தன்மைகள் பலவற்றையும்

அநுபவித்துப் பாடினார்கள் கோவிலில் ஒரு உருவத்தின் முன்பு நின்று பாடும் போதும் அவர்கள் அங்கு கல்லான ஒரு வடிவத்தைக் காணவில்லை. கடவுளையே கண்டார்கள். அன்போடு, உருகி அகங்குழைந்து பாடினார்கள். கண்ணப்பர் காளத்திஸ்வரர் கோவிலிலுள்ளது ஒரு கற்சிலை என்று எண்ணியிருப்பாரானால் அவருக்கு மாமிச உணவூட்டியிருப்பாரா? தன் கண்ணைத் தோண்டிக் கற்சிலையில் அப்பியிருப்பாரா? அவர் கடவுளையே கண்டார். பொய்யர்க்குப் பொய்யாகவும், மெய்யர்க்கு மெய்யனாகவும் உள்ளவர் கடவுள், கோவிலில் உள்ள திருவுருவத்தைக் கல்லாகக் காண்போருக்குக், கல்லாகவும் கடவுளாகக் காண்போருக்குக் கடவுளாகவும் நின்று காட்சியளிக்கின்றான் ஈசன். இது சத்தியம். இராமகிருஷ்ணர் ஆலய வழிபாட்டின் மகிமையை சமீபகாலத்தில் நமக்கு உணர்த்தி விட்டு மறைந்தார், தாம் பூஜை செய்து வந்த காளியின் திருவுருவத்தோடு அவர் பேசினார். காளியும் பேசினாள் தான் வழிபடும் அம்பிகையின் திருவுருவத்திற்கு உயிருண்டா இல்லையா என்று பஞ்சை அதன் மூக்கின் முன் வைத்துப் பரிசோதித்துப் பார்த்து அத்திருவுருவிற்கு உயிருண்டு என்று துணிந்தார்.

